بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *28/05/2021* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**கிலாஃபத்துக்கு முழுமையாகக் கட்டுப்படுதல் எனும் உறுதிமொழியை இறுதி மூச்சு வரை நிறைவேற்றுவதற்கு எல்லா தியாகங்களையும் செய்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். அப்போதுதான் நமது சந்ததிகளை கியாமத் வரையிலும் கிலாஃபத்துக்கு கட்டுப்படக் கூடியவர்களாக ஆக்குவதற்கான உரிமையை செலுத்தியவர்களாக நாம் இருப்போம்.**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَ عَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۪ وَ لَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِي ارْتَضٰى لَهُمْ وَ لَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ يَعْبُدُوْنَنِيْ لَا يُشْرِكُوْنَ بِيْ شَيْـًٔا ؕ وَ مَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ۝٥٦ وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ۝٥٧

அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும், அவன், அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு, அதற்குப் பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவார்கள். நீங்கள் தொழுகையை நிறைவேற்றுங்கள். மேலும் ஸக்காத்துக் கொடுங்கள். இத் தூதருக்குக் கட்டுப்பட்டு நடங்கள். அப்போது தான் உங்கள் மீது கருணை காட்டப்படும். **(திருக்குர்ஆன் 24: 56,57)**

நேற்று மே 27 ஆம் நாள் ஆக இருந்தது. அதை நாம் கிலாஃபத் தினமாக நினைவு கூருகிறோம். ஜமாஅத்தினுடைய வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், கிலாஃபத்தைக் குறித்து நமது பொறுப்புகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் கிலாஃபத் தினத்தில் ஜமாஅத்தில் கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. அல்லாஹ் நம்மீது மிகப்பெரும் கருணை புரிந்துள்ளான். நாம் இக்காலத்தில் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டுள்ள அவனுடைய தூதரை ஏற்றுக் கொண்டுள்ளோம். அதன் பிறகு கிலாஃபத்திடம் பைஅத் செய்துள்ளோம்.

நான் ஓதிய வசனங்களில் அல்லாஹ் மார்க்கத்திற்கு உறுதிப்பாட்டை வழங்குதல், பயத்தின் நிலையை பாதுகாப்பாக மாற்றுதல் ஆகிய வாக்குறுதி வழங்கியுள்ளான். இந்த வாக்குறுதி ஒரு நிபந்தனையுடன் வழங்கப்பட்டதாகும். அவர்கள் உறுதியான ஈமான் உள்ளவர்களாக இருக்க வேண்டும்; அவர்கள் நற்செயல்கள் செய்பவர்களாக இருக்க வேண்டும்; இபாதத்தின் உரிமையை வழங்குபவர்களாக இருக்க வேண்டும்; அல்லாஹ்வுக்கு எதனையும் இணையாக்குபவர்களாக இருக்கக்கூடாது. எந்தவிதமான இணைவைப்பின் அம்சமும் இருக்கக்கூடாது. இந்த விஷயங்களை பெறுவதற்காக தொழுகையை

நிறைவேற்றுபவராக ஆகுங்கள். அல்லாஹ்வின் வழியில் செலவு செய்பவர் ஆகுங்கள். ரசூலுக்கு கட்டுப்படுவது மிக மிக அவசியம் ஆகும். ஆக இந்த கருத்துக்களை நாம் நினைவில் கொள்வோம் எனில், கிலாஃபத் உடைய வெகுமதியில் இருந்து உண்மையான பலன் பெறுபவர்கள் ஆகிவிடுவோம்.

இந்த வசனம் நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தியாக இருக்கின்ற அதே வேளையில் கவலைக்குரிய இடமும் ஆகும். ஏனெனில் அதன் நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றவில்லை எனில் பிறகு இந்த வெகுமதியிலிருந்து உண்மையான முறையில் பலன் பெற இயலாது. தொழுகை, ஸக்காத், அல்லாஹ்வுக்குரிய உரிமைகள், அடியார்களுக்குரிய உரிமைகள் ஆகியவற்றை தரவில்லை எனில், அல்லாஹ்வுடைய கருணையையும் அருளையும் ஈர்ப்பவர்களாக ஆக முடியாது.

ஆகவே நாம் நமது வரலாற்றை மட்டும் தெரிந்தவர்களாவதும், கிலாஃபத் தினத்தை கொண்டாடுவது மட்டும் போதுமானதன்று. நமது ஈமானிய நிலை என்ன? என்று நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். மன நிம்மதியும் அமைதியும் எப்போது கிடைக்கும் எனில், நமது ஒவ்வொரு அமலும் முழுக்க முழுக்க அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுவதற்காக செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகிறார்கள்: நற்செயல் என்பது ஒரு அணு அளவும் கிளர்ச்சி அற்றதாகும். நினைவில் கொள்ளுங்கள்! மனிதனது செயல்களில் எப்போதும் களவு நடக்கிறது. அவை என்னவென்றால், பகட்டு, கர்வம், பல்வேறு வகையான ஒழுக்கக் கேடுகள் ஆகியவை ஆகும். இவற்றை சில நேரங்களில் மனிதன் உணர்ந்து கொள்வதும் கிடையாது. நற்செயல் என்பது அநீதி, கர்வம், பகட்டு, ஆணவம் மற்றும் மனித உரிமைகளை சேதப்படுத்துவதன் பக்கம் சிந்தனை கூட செல்லக் கூடாது. ஒரு வீட்டில் நற்செயல் செய்யக் கூடிய ஒருவர் மட்டுமே இருந்தாலும் கூட முழு வீடும் காப்பாற்றப்படும்.

நற்செயல் என்பது நமது எண்ணம் மற்றும் அபிப்ராயத்தின் அடிப்படையில் அமைவதில்லை. நன்மை என்பது குழப்பத்திற்கு எதிர் மறையானது ஆகும். ஆகவே நற்செயலிலும் எவ்வித குழப்பமும் இல்லாமல் இருத்தல் வேண்டும். நற்செயலுக்கு சுய விளக்கம் தரக்கூடாது. நல்ல தீர்ப்புகள் என்பதற்கு சுய விளக்கம் தரக்கூடாது. இவ்வாறான மக்கள் தாம் கிலாஃபத்துடன் இணைந்து இருப்பதாக அறிவிப்பது எந்த பயனும் தராது. தூய்மையான முறையில் கிலாஃபத்துக்கு கட்டுப்பட்டார்கள் எனில் அவர்களே உண்மையான முறையில் கிலாஃபத்துடன் விசுவாசமாக தொடர்பு கொண்டவர்கள் ஆவர். இவர்களே கிலாஃபத்தை பாதுகாப்பவர்கள் ஆவர். கிலாஃபத் இவர்களை பாதுகாக்கக்கூடியதாக இருக்கும்.

ஆகவே இதுவே உண்மையான கிலாஃபத் ஆகும். இதில் ஜமாஅத் மற்றும் காலத்தின் கலீஃபாவின் தொடர்பு இறைவனது திருப்தியைப் பெறுவதற்காகவே உள்ளது. இந்த கிலாஃபத்தே நிம்மதியையும் அமைதியையும் ஏற்படுத்த காரணமாக அமைகின்றது. பிற முஸ்லிம்கள் உலக தந்திரங்களால் உலக திட்டங்களால் கிலாஃபத்தை உருவாக்க விரும்புகின்றனர். அவர்களின் இந்த தந்திரங்களும், திட்டங்களும் ஒருபோதும் பயன்தராது. அவர்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும் அல்லாஹ் தீர்மானித்திருப்பதற்கு ஏற்பவே இப்போது கிலாஃபத் தொடரும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல் வஸிய்யத் எனும் நூலில் கிலாஃபத் அமைப்பு குறித்து மிகவும் விரிவாக கூறியுள்ளார்கள். அன்னார் கூறுகிறார்கள்: “இது அல்லாஹ்வுடைய நடைமுறை ஆகும். அவன் தனது நபிமார்கள் ரசூல்மார்களுக்கு உதவி செய்கின்றான். எந்த நேர்வழியை அவர்கள் உலகில் பரப்ப விரும்புகிறார்களோ அந்த விதையை அவர்கள் மூலமாகவே உலகில் விதைக்கிறான். ஆனால் அதன் முழுமையை அவர்களது கைகளின் மூலமாக நிறைவு செய்வதில்லை. மாறாக வெளிப்படையில் தோல்வி எனும் அச்சத்தை தன்னுள் கொண்டுள்ள ஒரு நேரத்தில் அவர்களுக்கு மரணத்தை தந்து, எதிரிகளுக்கு எள்ளி நகையாடவும் பழிச்சொற்களையும் அவதூறுகளையும் கூறுவதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்து விடுகிறான். அவர்கள் எள்ளி நகையாடி, பரிகாசம் செய்த பிறகு தனது வல்லமையின் இரண்டாம் கரத்தை காட்டுகிறான். அதன் மூலம் ஓரளவுக்கு முழுமை

பெறாமல் இருந்த அந்த நோக்கங்கள் அதன் முழுமையான நிறைவை எட்டி விடுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி விடுகிறான்.''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய மரணம் ஒவ்வொரு அஹ்மதியையும் உலுக்கிய அதே நேரத்தில் மற்றவர்களும் அதனைக் கண்டு மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்ததை நாம் கண்டோம். அன்னாரின் வஃபாத்தின்போது எவ்வாறான மகிழ்ச்சி கொண்டாடப்பட்டது என்றால் மனிதநேயம் அதனை கேட்டு வெட்கம் கொள்ளும். அந்த வீணான விஷயங்களை கூற வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஜமாஅத் அமைப்பு சிதறுண்டு போய் விட்டது என்றும், அஹ்மதிய்யத்தை விட்டு பாவ மன்னிப்பு கேட்கப்பட்டது என்றும் அவர்கள் பொய்யான தகவல்களை பரப்பினார்கள். அவற்றைக் குறித்து எடுத்துரைக்கிறேன்.

பீர் ஜமாஅத் அலீ ஷாஹ் உடைய சீடர்கள், மிர்ஸாக்கள் பாவ மன்னிப்பு கோரி பைஅத் செய்கின்றனர் என்று கூறினர்.

காஜா ஹஸன் நிஸாமி சாஹிப் அஹ்மதிகளுக்கு ஒரு ஆலோசனை வழங்குகிறார்: மிர்ஸா சாகிபோ மரணித்து விட்டார். இப்போது உங்களை யாரும் பராமரிக்க இயலாது. ஆகவே அஹ்மதிய்யத்தை விட்டு விடுங்கள். எங்களுடன் இணைந்து விடுங்கள்.

**நான் உன்னுடனும், உன்னுடைய அன்பர்களுடனும் இருக்கிறேன்** என்று இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறை அறிவிப்பின் மூலம் கூறியது இவர்களுக்கு தெரியாது. மற்ற நபிமார்களைப் போன்று உமக்குப் பிறகும் கிலாஃபத்தின் தொடர் ஆரம்பமாகும் என்று அன்னாருக்கு அல்லாஹ் ஆறுதல் வழங்கினான்.

**சில பலவீனமான இயல்புள்ள அஹ்மதிகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நபி என்று கூறுவதிலிருந்து தயக்கம் காட்டுகின்றனர். இங்கு அதற்கும் பதில் வந்து விட்டது. அன்னாரே கூறுகிறார்கள்: "என்னுடைய ஜமாஅத் நபியுடைய ஜமாஅத் ஆகும். நான் நபியாவேன்."**

இரண்டாம் வல்லமை தொடர்வதைக் குறித்து அன்னார் கூறுகிறார்கள்: ''நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும் எனக்கு பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள்.''

ஆக நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய முன்னறிவிப்புக்கு ஏற்ப கடந்த 113 வருடங்களாக அல்லாஹ்வின் அருள்களை எழுத்துக்கு எழுத்து நிறைவேறக் காண்கிறோம்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைக் குறித்து கர்ஸன் கெஸட் எனும் செய்தித்தாள் எழுதியதாவது, மிர்ஸாக்களிடம் இப்பொழுது என்ன எஞ்சி இருக்கிறது? அவர்களின் தலை துண்டிக்கப்பட்டு விட்டது. ஒருவர் அவர்களின் இமாமாக ஆகி இருக்கிறார். அவரால் ஒன்றும் செய்ய இயலாது. ஆயினும், பள்ளிவாசலில் உங்களுக்கு திருக்குர்ஆன் ஓதிக்காட்ட மட்டுமே இயலும்.

அவர்களின் இவ்விஷயத்தை கேட்ட பிறகு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், ''இறைவன் அவ்வாறே செய்யட்டும். நான் உங்களுக்கு குர்ஆன் ஓதிக் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும்'' என்று கூறினார்கள்.

இந்த பணியை அன்னார் மிக நன்றாக செய்தார்கள்தான். அத்துடன் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நயவஞ்சகர்கள் மற்றும் கிலாஃபத்தின் எதிர்ப்பாளர்களின் குழப்பங்களை மிகவும் கடுமையாக அடக்கி விட்டார்கள். ஒருவருக்கும் துணிச்சல் வரவில்லை. எந்த விஷமத்தையும் எவரும் செய்ய முடியவில்லை.

பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட போது அஞ்சுமனின் பொறுப்பாளர்கள் எல்லா செல்வங்களையும் எடுத்துக் கொண்டு ஓடி விட்டனர். கிலாஃபத்தின் மூலமாக அல்லாஹ் ஜமாஅத்திற்கு எவ்வாறு நிம்மதியை வழங்கினான் என்று உலகம் கண்டது. அந்த இளைஞருடைய பொறுப்பில் அல்லாஹ் கிலாஃபத்தின் கடிவாளத்தை கொடுத்தான். எந்த அளவு விரைவாக ஜமாஅத்தை வளர்ச்சியின்

நிலைகளில் அழைத்துச் சென்றவாறு முன்னேறினார் என்பதற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் 52 வருட கிலாஃபத் காலகட்டம் சாட்சியாக உள்ளது.

1965 ல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மரணம் அடைந்தார்கள். அல்லாஹ் இரண்டாம் வல்லமையின் மூன்றாவது வெளிப்பாட்டை நிலைநாட்டினான். அன்னாருடைய கிலாஃபத் கால கட்டத்தில் உலகம் முழுவதிலும் ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்படுவதில் முன்னேற்றம் கண்டது. 1974 ல் அஹ்மதிகளை முஸ்லிம் அல்லாதவர்கள் என்று கூறி ஜமாஅத்தின் கைகளில் பிச்சைப் பாத்திரம் ஏந்த வைப்பதாக பேச்சு எழுந்த போது, இறைவன் எதிரிகளின் திட்டங்களை மண்ணைக் கவ்வச் செய்தவாறு ஜமாஅத்திற்கு பொருளாதாரத்திற்கான புதிய வழி வகைகளை திறந்தான்.

1982 ல் நான்காவது கிலாஃபத்தின் தொடக்கத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றத்தைக் கண்டு எதிரி கலக்கமடைந்து விட்டான். அஹ்மதிய்யா கிலாஃபத்தை செயல் இழக்கச் செய்யும் திட்டங்களை தீட்டினான். ஆனால் இறைவன் தனது அசாதாரண உதவியுடன் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் ஹிஜ்ரத்துக்கான ஏற்பாட்டைச் செய்தான். சேட்டிலைட் மூலம் அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாத்தின் போதனை ஒவ்வொரு வீட்டையும் எட்ட ஆரம்பித்தது.

2003 ல் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் மரணம் ஜமாஅத்திற்கு ஒரு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் இறைவன் நம்பிக்கை கொண்டவர்களின் துஆவை ஏற்றான். பயத்தின் நிலையை மீண்டும் ஒரு முறை பாதுகாப்பாக மாற்றினான். இஸ்லாத்தின் ஆரம்பக் காலத்தில் நேர்வழி பெற்ற கிலாஃபத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய முன்னறிவிப்புக்கு ஏற்ப நான்கு கிலாஃபத்துகளைக் கொண்டதாக இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றிய பிறகு இஸ்லாமிய வரலாற்றில் பல புதிய வாசல்கள் திறந்தன. ஐந்தாவது கிலாஃபத்தும் அதில் ஒரு பகுதியாகும். இந்த கால கட்டமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்பவேயாகும்.

இக்கால கட்டத்தில் உலகம் முழுவதும் அசாதாரண வேகத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்பட்டுள்ளது. திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்யும் பணியாக இருந்தாலும் சரி! அல்லது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய நூல்களின் பணியாக இருந்தாலும் சரி! அல்லது MTA விரிவடைந்ததாக இருந்தாலும் சரி! எல்லா களத்திலும் அசாதாரண முன்னேற்றம் தென்படுகிறது. கொரோனா வைரஸ் தொற்றின் கால கட்டத்தில் Online சந்திப்புகளின் புதிய தொடர் ஆரம்பமானது. இதனால் காலத்தின் கலீஃபாவுக்கும் ஜமாஅத்துகளுக்கும் நேரடியான தொடர்பு ஏற்படுகிறது. இவை அனைத்தும் இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த வாக்குறுதிகளுக்கு ஏற்பவே ஆகும். ஆகவே நாம் இறைவனுக்கு நன்றி செலுத்தக் கூடிய அடியார்களாக மாறியவாறு அவனுக்கு முன்னால் குனிந்தவாறு, கிலாஃபத்துக்கு கட்டுப்பட்டு, கீழ்படிந்து இருக்க வேண்டிய தேவை உள்ளது.

இந்த இயக்கத்தின் முழு வெற்றியின் காட்சியை நமது கண்களால் காண்பவர் ஆவோமாக! நமது இபாதத்துகள், நமது தொழுகைகள், நமது செயல்கள் அல்லாஹ்வின் திருப்தியை பெறுபவையாக இருக்கட்டுமாக. அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

இன்று நான் துஆவிற்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். பாக்கிஸ்தான் அஹ்மதிகள் மற்றும் அநீதிக்கு உள்ளாகும் அஹ்மதிகள் எங்கிருந்தாலும் அவர்களுக்காக துஆ செய்யுங்கள். பாலஸ்தீனத்துடன் சேர்த்து அநீதிக்கு உள்ளாகும் முஸ்லிம்கள் அனைவரையும் துஆவில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் அனைவரின் கஷ்டங்களையும் நீக்குவானாக! மேலும் முழு உலகிலும் நாம் விரைவில் இஸ்லாத்தின் கொடியை, ஹஸ்ரத் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய கொடி பறப்பதை காண வேண்டும். முழு உலகிலும் ஏகத்துவம் நிலை நாட்டப்படுவதை காண வேண்டும்.

*(தமிழாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்)*